Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 155 of 2024

DATE : 10 .07.2025

Depositions of witness for Prosecution

PW : 7

| Name | லிங்கசாமி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | பாரதி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2025

**(எதிரி ஆஜர்.)**

முதல் விசாரணை : –

1) நான் அமச்சியார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 18.03.2022 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு போலீஸார்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் கருப்பசாமி என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ–3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்கத் தெரியும் எழுத தெரியாது. எத்தனை மணிக்கு கையெழுத்து செய்தேன் என்றால் மதியம் 2.30 மணிக்கு கையொப்பம் செய்தேன். போலீஸ் விசாரணையில் அதிகாலை 2.30 மணிக்கு கையெழுத்து செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரி அல்ல. போலீஸ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் உள்ள

**சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும்.**

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னுல் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னுல் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 155 of 2024

DATE : 10 .07.2025

Depositions of witness for Prosecution

PW : 8

| Name | அங்கம்மாள் | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | பவுன்ராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2025

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அமச்சியார்புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 8 மணி அளவில் அலெக்ஸ் பாண்டியன் என்பவர் ஓடி வந்தார். முத்துராஜ் என்பவர் கிழக்காக ஓடி வந்தார். அமச்சியார் கோயில் அருகே சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தோம். ஆஜர் எதிரி அவரது வீட்டில் இருந்து அருவாளை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சி அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அத்தாட்சியிலும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கையெழுத்து செய்த மற்றொரு நபர் யார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

1) கடந்த 12.04.2022ம் தேதி 10.30 மணிக்கு நானும் முத்துக்குமார் என்பவரும் அமச்சியார்கோவில் அருகே ஆஜர் எதிரி எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எனக்கு எழுதப் படிக்க தெரியுமா என்றால் தெரியாது கையெழுத்து செய்வேன். புகார் முத்துராஜ் எனக்கு உறவினர் என்றால் பக்கத்து வீட்டுக்காரர். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதியான ஆஜர் எதிரி அவரது வீட்டில் இருந்து அருவாளை எடுத்து ஒப்படைத்தார் என்ற சங்கதி போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும் நேரடியாக நான் ஆஜர் எதிரி அருவாளை ஒப்படைத்ததை பார்க்கவில்லை. ஆஜர் எதிரியை எனது முன்னிலையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் முன் விரோதம் இருக்கிறதா என்றால் இல்லை. அத்தாட்சியில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு